சார்பு நீதிமன்றம், திருவைகுண்டம்,

முன்னிலை : திருமதி.A.பர்சாத்பேகம், பி.ஏ.,எம்.எல்.,

சார்பு நீதிபதி, திருவைகுண்டம்

2026ம் ஆண்டு ஜீலை மாதம் 17 –ம் நாள், வெள்ளிக்கிழமை

**எச்.எம்.ஓ.பி.எண்.7/2025**

**(CNR.No.TNTT19 - 000036 - 2025)**

ராஜா, த/பெ.பரமசிவன், கதவு எண்.6/71, சொக்கனூர் காலனி, திருக்களூர் கிராமம், ஏரல் வட்டம், தூத்துக்குடி மாவட்டம். .. மனுதாரர்

/எதிர்/

நித்யா, க/பெ.ராஜா, கதவு எண்.6/71, சொக்கனூர் காலனி, திருக்களூர் கிராமம், ஏரல் வட்டம், தூத்துக்குடி மாவட்டம். ..எதிர்மனுதாரர்

இம்மனுவானது இந்து திருமணச் சட்டம் பிரிவு 13(1)(ia)–ன் கீழ், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 24.01.2019ம் தேதியில் ஆழ்வார்திருநகரி பெரியநம்பி திருமாளிகை திருமண மண்டபத்தில் வைத்து இந்து மத சம்பிரதாயப்படி நடந்த திருமணத்தினை ரத்து செய்து விவாகரத்து வழங்கும்படிக்கும், மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கலான நாள் : 29.01.2025

நீதிமன்ற முத்திரை கட்டணம் – மனுதாரர் தமிழ்நாடு நீதிமன்ற முத்திரை கட்டணம் மற்றும் வழக்கு மதிப்பீடு சட்டம், ஆர்ட்டிக்கிள் 11(1)(ii)படி ரூ.50/–க்கு இத்துடன் நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனுவானது 17.07.2026 ஆன இன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.இசக்கி நடராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஆறுமுகபெருமாள் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர் தரப்பில் அழைத்தும் நீதிமன்றத்தில் ஆஜரில்லாத காரணத்தால், இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ...

**தீர்ப்பாணையுத்தரவு**

1. மனுதாரர், வருகை தவறுதல் காரணமாக மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத் தொகை குறித்த உத்தரவு இல்லை.

(இருதரப்பிலும் செலவு விபரப்பட்டியல் தாக்கல் இல்லை)

2026ம் ஆண்டு ஜீலை மாதம் 17–ஆம் நாள், என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

BARSAD BEGUM A Digitally signed by BARSAD BEGUM A Date: 2026.07.17 16:01:24 +0530

**சார்பு நீதிபதி,**

**திருவைகுண்டம்.**

சார்பு நீதிமன்றம்,

ஸ்ரீவைகுண்டம்

எச்.எம்.ஓ.பி.எண்.7/2025

தீர்ப்பாணையுத்தரவு

நாள்–17.07.2026.